சோவியத் மீது சியாங் கும்பல் பாய்ச்சல்!

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (3—10—49) வெளியீடு (4—10—49) [இதழ் 55

ஐக்யநாடு சபையில் சலசலப்பு!

வெகுஜன விரோதிக்கு வரிசை வழங்குவது விவேகமா?

கோமின்டாங் குலைந்தது - மக்களாட்சி மலர்ந்தது!

சீனாவின் சர்வாதிகாரி, ஜனநாயகப் போர்வையில் திரிந்து வந்த வெகுஜனவிரோதி, சீறியெழுந்த மக்கள் சக்திக்கு முன்னால், எதிர்த்து நிற்கமுடியாமல், அரியாசனத்தை இழந்து, அரச போகத்தைப் பறிகொடுத்துவிட்டு, காடுமேடு சுற்றிவருகிறார். கிழடு தட்டிவிட்ட சிங்கம்போல்! பலகோடி மக்கள், தன்மீது வைத்திருந்த நம்பிக்கையைத் தன் நடத்தையாலேயே இழந்துவிட்டபிறகாவது, மக்களின் பகையையாவது பெறாமல் இருக்க முயன்றிருந்தால், தலையைக் காப்பாற்றிக்கொள்ள, நாடோடி போல் நாடு நகரங்களைச் சுற்றித் திரிந்து, மறைவிடம் தேடவேண்டிய துரதிர்ஷ்டம் ஏற்பட்டிருக்காது சியாங்கிற்கு!

இந்தச் சேழித்த நிலையிலும், சியாங்கின் மனத்தில், சீனமக்களை மதித்து நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் தோன்றவில்லை. கொடுங்கோலரின் கோணல் ஆட்சியை எதிர்த்த சீன மக்களை, 'என்னையா எதிர்க்கிறீர்கள் நாய்களே! சுட்டுத் தள்ளுவேன்! குருதியைக் குடிப்பேன்! அனுகுண்டாரின் பண குண்டு ஆதரவு எனக்கு இருக்கும் வரையில், என் பதவியைப் பறிக்க, எவருக்குண்டு, இந்த அவனியில் ஆற்றல்?' என்றப் போக்கிலே சீன மக்களின் அன்பை ஒழித்துக்கட்டுவதில் சியாங் முனைந்திருந்தார். சீன மக்களைக் கொன்று குவிக்க, கோடிக்கணக்கில் கொலைக் கருவிகளைக் கொடுத்து உதவிய அமெரிக்கா, சியாங்கின் பாசிசப் பிடியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சீன மக்கள் தொடுத்தப் போருக்கு, சோவியத் இரஷ்யா உதவி செய்தது அடுக்குமா? தர்மமாகுமா? நீதியாகுமா? என்று பேசக் கிளம்புவது கொஞ்சமும் தர்மமாகாது. ஒரு நாட்டின் மக்களை மதிக்காது, மக்களாட்சிக் கோட்பாட்டுக்குக் கட்டுப்படாது, மக்களின் வாழ்க்கையை வளமாக்க வேண்டுமென்ற பரந்த நோக்கம் கொள்ளாது, பசிக்குப் பரிகாரம் கேட்ட மக்களை—வறுமையைப் போக்க வகை கேட்ட மக்களை—வளைந்து வளைந்து பேசிய மக்களை, வதைத்துக் கொல்ல, அவனை புரிந்து வந்த மனித சமூக விரோதிகளுக்கு—ஆளும் வர்க்கத்திற்கு—தாராளமாக ஆயுதம் கொடுத்து ஆதரவு காட்டி வந்த அமெரிக்கா, அறநெறி—அரசியல் ஒழுங்கு—கோல்முறை—பேசுவது, கொடுமை! கொடுமை!

—கேலிக் கூத்து!

உலக அமைதிக்கு, ஆக்கம் தேடும் — நல்லதோர் அஸ்திவாரம் அமைக்கும்—உயர்ந்த இலட்சியங்களோடு துவங்கப்பட்டது ஐக்கிய நாடு சபை. அந்தோ! இன்று இந்தச் சபையை, அமைதி, காணவும் கூசுகிறது! அதனுள் கால்வைக்கவும் நடுங்குகிறது!

அமைதி காக்கக் காணப்பட்ட அவை, அதனை அழிக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது. சோவியத்- அமெரிக்கா ஆகிய இருநாடுகளும், 'சத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற முறையில தங்கள் தங்கள் இலட்சியப் போராட்டக் களமாக, ஐக்கிய நாடு சபையை மாற்றிவிட்டிருக்கின்றன. ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள அச்சத்தை வளர்த்துக்கொள்ளவும், அச்சுறுத்தலைப் பெருக்கிக்கொள்ளவும், அந்தச் சபை இன்று அரும்பணி புரிகிறது! அமைதியை வளர்க்க எழுந்த அவை, அதனைக் கொலை செய்யும் பலிபீடமாக மாறிப் போயிருக்கிறது!

சீனாவில் மக்களாட்சி, மாசேதுங் தலைமையில், பீப்பிங் நகரைத் தலைநகராகக்கொண்டு, நிர்மாணிக்கப்பட்டாய் விட்டது. துணைத் தலைவராக, திருமதி சன்யாட்சன் உள்ளிட்ட அறுவர், புதிய சீனக் குடியரசின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டார்கள். சீனப் படையின் தனித் தளபதியாக ஜெனரல் சூடெ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பொருளாதாரத் துறையிலும் முழு சமத்துவம் கொண்ட மக்களாட்சி சீனாவில் நிறுவியாகிவிட்டது. மொத்தம் 576 பிரதிநிதிகள் இத்தேர்தலில் கலந்துகொண்டனர். சீனாவின் ஆட்சிப் பொறுப்பு மக்கள் கைகளுக்கு மாறிவிட்டது. மகிழ்கிறோம், மக்களாட்சிமுறையில் நமக்கு மாறாத நம்பிக்கையும் பற்றுதலும் இருக்கிற காரணத்தால்.

சியாங், இனி யாருக்குத் தலைவர்? எந்த நாட்டுக்குச் சர்வாதிகாரி? எவர் சார்பில் இனி வாய்திறந்து பேசுவது? அவருக்கு, அவரேதான் இனி பிரதிநிதி! திருமதி சியாங் அம்மையைக் கூட, அவர், இனி அதிகாரம் செய்யமுடியாது!

சியாங்கின் ஆட்சிக் கதையையும் இனி முடிவாகவேண்டியது

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

இந்தியாவை உலகப் பெரு நாடாக்க

இந்துக்களால் மட்டும் இயலுமா?

“உலகத்தில் இந்தியாவை ஒரு மாபெரும நாடாக—மகத்தான வல்லரசாக மாற்றியமைக்கவேண்டும் என்பதுதான் ரா. சு. சே. சங்கத்தின் உள்ளக்கிடக்கையாகும். இந்த மாபெரும் வேலையைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் இந்துக்கள்மட்டுமே என்று நாங்கள் நம்புகிறோம. இந்துக்கள் மட்டுந்தான் இந்தியாவுக்குப் புகழையும் செழுமையையும் உண்டாக்கிவைக்கும் திறன் படைத்தவர்கள்.”

இந்த வார்த்தைகளை, ரா. சு. சே. சங்கத் தலைவர், மத்திய மாகாணத் தலைநகராகிய நாகபுரியில் வெளியிட்டார்.

உலகத்தின் நாடுகளிடை இந்தியா முதன்மை பெற விழைந்தால், மற்றெத்துறைகளிலும முடியாவிடினும் வாய்ப்பேச்சு வீரர்களை நிறையக் கொண்டிருக்கும் நாடு என்பதில் இந்தியாவை வென்று முன்னேறி நிற்க மற்றெந் நாட்டாலும முடியாது.

உலகிலுள்ள பிற நாடுகளிலுள்ள தலைவர்கள, பொதுமக்களிடையே கூறுபவைகளைக் கூடியவரையில் செயலில் நிறைவேற்றிவைக்க முயல்வார்கள். முடியாவிடில் நாணயமாக விலகிக் கொள்வார்கள்.

ஆனல் இந்தியாவில் எவரும் எதையும எப்படியும் பேசுவார்கள்; எழுதுவர்; திட்டம் தீட்டுவர்; வழி வகுப்பர்; ஆனல் நடவடிக்கையில் ஒன்றும் இராது. வெறும் சொல்லலங்காரமாக, வாய்ப்பேச்சு வீரமாகவே முடியும்.

அத்தகைய வீரத்தில் ரா. சு. சே. சங்கத்தலைவர் பேச்சும் ஒன்று.

இந்தியாவை உலகப் பெருநாடுகளுள் ஒன்றாக ஆக்க முயலுமுன், நாகரிகமுடைய — மனிதத்தன்மையுடைய—உயர் பண்புடைய நாடாக ஆக்குவது முதல் வேலையாகும். இவ்வேலைக்கு முட்டுக்கட்டையாக இருப்பது வர்ணாசிரம-சனாதன தர்மம்-இந்துவைதிக மதம். நாட்டிலே மக்களைப் பலவகை இனத்தவராக, ஒற்றுமையற்றவராக, உயர்வு தாழ்வு வேறுபாடுடையவர்களாக ஆக்கிவைத்து, அவர்கள் என்றைக்கும் ஒற்றுமைப் படாதவாறு தர்மோபதேசம் செய்து, மதக்கருத்தளித்து, வைதிகப் பிடியைக் காட்டித்தடை செய்து வருவது வைதிக இந்து மதமே. இப்படியிருக்கையில் நாட்டை நாகரிக முடையதாக்க—மனிதத் தன்மையுடையதாக்க இந்து மதத்தால் முடியுமா? இதையே செய்ய முடியாத இந்து மதக்காரர்கள் இந்தியாவை உலகப் பெருநாடாக, மகத்தான வல்லரசாக மாற்றியமைக்க முயல்வது மயிலைக்கண்டாடிய வான்கோழியின் தன்மையை ஒத்ததாகவே இருக்கிறது.

எனவே, மக்களைப்பிரித்துப் பிரித்துப்பல பிளவுகளாக்கி, உயர்வு தாழ்வுகளுக்குள்ளாக்கி, மாக்களாக்கி வைத்திருக்கும் சனாதனத்தைத் தழுவிக் கொண்டிருப்பவர்கள்தான் இந்தியாவுக்குப் புகழையும், செழுமையும் உண்டாக்கி வைக்கும் திறனுடையவர்கள் என்றால், இவர்களால் ஏற்படக்கூடிய புகழும் செழுமையும் எத்தகையவைகளாயிருக்கும்? எவருக்குப்பயன் தரும்? என்பவைகள் நன்கு விளங்குகின்றன அல்லவா?

ஆன்ம உயர்வாளர்களுக்கிடை அழுக்காறு

—(0)—

கொலைத் தொழில் குருமார்களின் பண்பு போலும்!

திபேத்தில் சில கிறித்தவப் பாதிரிகள் தங்கள் சமயத் தொண்டாற்றி வருகின்றார்கள். ஆனல் கிறித்தவ சமயம் பரவுவதை விரும்பாத இந்து சன்யாசி மடங்களின் தலைவர்களான லாமா என்னும் குருமார்கள். கொலைத் தொழிலை மிகத்தாராளமாகக் கையாண்டு பல கிறித்தவர்களையும், பாதிரிகளையும் கொன்றொழித்து வருகின்றனர்.

அண்மையில், கானன் மாரிஸ் டோர்னே என்னும் பெயருடைய 39-வயதுப் பாதிரி எர்க்காலோ கிராம (திபேத்) லாமா குருமார்களால் கொல்லப்பட்டார். இதுவரை 4 பாதிரிகளை இந்த லாமாக்கள் கொன்று விட்டிருக்கின்றனர்; சுமார் 300 கிறித்தவர்களைக் கொன்று புதைத்துவிட்டிருக்கின்றனர்.

இப்போது லாமாக்களின் எல்லைக்குள் இன்னும் 6 பாதிரிகள் கிறித்தவ சமயத் தொண்டு புரிந்து வருகின்றனர்.

இந்த சன்யாசிமடங்களின் தலைவர்களான லாமாக்கள், தங்கள சமயப் பெருமைகளைக் கூறி, மக்கள் மனம் பிறசமயங்களால் கவரப்படாமல் தடுப்பதைவிட்டு, பிற சமயக் குருமார்களைக் கொன்று ஒழிப்பதும், பிறசமய மக்களை வெட்டிக் குழியில் புதைப்பதுமாக இருப்பதனால், தங்கள் எண்ணம் நிறைவேறிவிடும் என்று எண்ணினால், இந்த 10-ஆம் பசலிப்பைத்தியக்காரச் செயலுக்கு ஒப்புக்காட்ட வேறு எதுவும் கிடைக்காது.

ஆனல் மதப்போர்வையில் குருமார்கள் வேடம் தாங்கி நடிக்கும் இந்த லாமாக்களின் மதப் பண்பாடும், அறிவு குணநலனும் ஒழுக்கமும் எத்தகையவை என்பதை மேற்கண்ட சம்பவங்கள் நன்கு விளக்குகின்றன.

கிறிஸ்துவப் பாதிரிகளும் இந்து லாமாக்களும் கடவுளிடம் நேராகப் போக வழிகாட்டுபவர்கள். இவர்களுடைய கதியும் குணமும் இவ்வாறு இருக்கின்றன. மதம் இவர்களுக்குக் கற்பித்த ஒழுக்கமும் நீதியும் இதுதான் போலும்!

கவர்னர்-ஜெனரல் மாளிகையில் காளி பூசை விருந்து

———

இந்தியாவின் கவர்னர்-ஜெனரல் திரு. சி. இராஜகோபாலாச்சாரி, வியாழனன்று, அரசியல் தூதர்கள், ஒரிசா கவர்னர், முதலமைச்சர் உட்பட 1000 பேருக்குக் காளிபூசையை (தசரா) முன்னிட்டு விருந்தளித்தார். அதே நேரத்தில் நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள், பட்டினி கிடந்து குற்றுயிராக வாழ்கின்றனர். மதச்சார்பற்ற ஆட்சிப்பொறுப்பின் தலைமைப் பீடத்தைத் தாங்கி நிற்கும் கவர்னர்ஜெனரல் மாளிகையில்தான் காளிபூசைக் களியாட்டம். மக்கள் திண்டாட்டம், களியாட்டத்திலேயச் [illegible] -ட்டுமா?

மாலை மணி

சென்னை 3—10—49 திங்கட்கிழமை

கிளைக் கழகம் காணுங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள், ஆங்காங்கு அழகுற உருவாகி வருவது காண மகிழ்கிறோம். அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள தோழர்களுக்கு, மனமார்ந்த பாராட்டுதலை வழங்குகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்துப் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. மிகக் குறுகிய காலம்! இந்தக் குறுகிய இடைக் காலத்தில், கழகம் அடைந்துள்ள முன்னேற்றம் மகிழ்ச்சித் தரக்கூடியதாக இருந்து வருகிறது.

அறுபதுக்கு மேற்பட்ட ஊர்களில் கிளைகள் அமைந்துவிட்டன—மிகக் குறுகிய காலத்தில், இது மிகப் பெரிய வெற்றியின் அறிகுறிதான்.

கிளைக் கழகங்கள் தோன்றுவதோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமாக நின்று, "வம்மின், வந்து கழகத்தில் சேர்மின்" என்று கூறுவதுபோல், அசைந்தாடிக் கொண்டிருக்கும் கழகத்தின் இருவண்ணக்கொடியை, ஆங்காங்கு ஏற்றுகிறார்கள் என்ற செய்தி, கழகத் தோழர்களின் ஆர்வத்தின் அளவைத் தெளிவுறக் காட்டுகின்றது.

கழகம் அமைக்கும் முறையிலும், கழகக் கொடிகளை ஆங்காங்கு ஏற்றும் முறையிலும் நம் முன்னேற்றக் கழகத் தோழர்கள் கண்ணியத்தைக் கடைப் பிடித்திருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும். நீதி, நேர்மை, ஒழுங்கு, சட்டம் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டு, ஜனநாயக முறையில், பெரும்பான்மையினரின் கருத்துக்கு இடங்கொடுத்து, பெரும்பான்மையோரின் கருத்துக்கு இசைய ஆங்காங்குச் செயலாற்றி வருகிறார்கள். இந்தப் பண்பின் அடிப்படையிலே நின்று, மோதுதலைத் தவிர்த்து, நேரிய வழியில், மற்றுமுள்ள ஊர்களில் உள்ள தோழர்கள் செயலாற்றிச் செல்ல வேண்டும் என்பதே நமது அவா.

இன்பத் திராவிடங் காண, ஈடும் எடுப்புமற்ற இலட்சியத்தோடு, ஜனநாயக முறையில் நின்று வேலை செய்ய முனைந்துள்ளோம். அதற்கான செம்மை வழியையும் அமைத்துக்கொண்டு விட்டோம். இலட்சியத்தை வெற்றியுறச் செய்வதே நம் நோக்கம். "சில்லறை" விஷயங்களிலே தலையிட்டு நமது நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் செலவிட்டு ஒருக்காலும் பாழ்படுத்திக் கொள்ளப் போவதில்லை. மதியைப் பார்த்துக் குக்கல் குரைப்பதால், குக்கலுக்குத்தான் வாய் வலிக்குமே யொழிய, மதிக்கு ஒன்றும் கேடு வந்துவிடுவதில்லை. மதியைத் தன் மனம் போன போக்கில் ஏதேதோ நினைத்துக் கொள்வதால்தான், குக்கல் கோபம்கொண்டு குரைக்கத் தலைப்படுகிறது. குறைபாடு குக்கலிடத்திருக்கிறதே யொழிய, மதியிடத்தல்ல. அதுபோல, யார் என்ன கூறினாலும்—அவர்கள் ஏதாவது கூறிக் கொண்டே யிருக்கும் பழக்கப்பட்டவர்கள் ஆதலால், அவர்கள் கூற்றுக்களைப் பொருள்படுத்தாமல் இலட்சிய நிறைவேற்றத்துக்குப் பாடுபட நம் முன்னேற்றக் கழகத் தோழர்கள் கண்ணுங்கருத்துமாய் இருக்க வேண்டும்.

ஒரு கட்சி, நாட்டுக்கு நலம் பயக்க வேண்டுமானால், ஜனநாயக அடிப்படையில் வளர்ந்தால்தான் முடியும். ஒரு மனிதனின் சர்வாதிகாரத்துக்குக் கட்டுப்பட்டே, ஒரு கட்சி கண்மூடித்தனமாக நடந்து தீரவேண்டுமென்று, சர்வாதிகாரத் தலைவன் ஒருவன் கூறுவானானால், அந்தக் கட்சி நீண்டநாள் வாழமுடியாது-விரைவிலே அழிந்துவிடும்-சர்வாதிகாரத் தலைவன் ஒருவனின் விருப்பு வெறுப்புக்கு நலம் ஏற்படுமேயொழிய, நாட்டுக்கு நலம் ஏற்படாது-மேலும் அது கட்சியாக இருக்காது-மடமாகத்தான் காட்சியளிக்கும். இதைத்தான் உலக வரலாற்று ஏட்டுச் சுவடிகள் எடுத்துக் காட்டுகின்றன. மதகுருமார்கள் ஆட்சியும், மதோன்மத்தர்களின் அரசாட்சிகளும் சடசடவெனச் சரிந்ததற்குச் சர்வாதிகாரப் பிற்போக்குத் தன்மைகளேயாகும். இது ஜனநாயக ஆட்சி முறைக்காலம்; 'உபதேசிகள்' தோன்றமுடியாத, வாழமுடியாத, வாழவைக்காத காலம்.

அழிவு பயக்கும் சர்வாதிகாரப்போக்கு அற்ற முறையில், ஆக்கம் பயக்கும் ஜனநாயக அடிப்படையில்தான் நமது முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகப் போக்குக் கொண்ட கட்சிகள் சில வேளைகளில் அழிந்துபடக் காணுகிறோம் என்றால், பிற்போக்கு-சுயநலம்-சுரண்டல் சர்வாதிகார-பொறாமை-பேராசை பிடித்தவர்கள் கட்சிக்குள்ளே வந்து புகுந்துவிடுவதுதான் காரணம். அத்தகைய காளான்கள் முளைக்காமல் வளர்க்கப்பட்ட கட்சிகள் உலகில் எவ்வளவோ காலமாக உயிர் வாழ்ந்து வளம் பெற்று வளர்ந்து வருகின்றன. ஆனால் சர்வாதிகார மனப்பான்மை கொண்ட ஒரு மனிதன் தேவைக்கே என்று வளர்க்கப்படும் கட்சிகள் நீண்ட காலம் உயிர்வாழ்ந்ததில்லை; அவன் காலத்திலேயே அழிந்திருக்கின்றன அல்லது அவன் ஆயுட்காலத்தோடு முடிவடைந்திருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம், பிற்போக்கு மனப்பான்மையா குடிபுக முடியாத வகையில்; கள்ளம்-கவடு-சூது-சூழ்ச்சி-வஞ்சகம்-பொறாமை-சுயநலம் ஆகிய இந்தக் கீழ்த்தரப் பண்புகள் எதுவும் குடிபுக முடியாத, முறுக்கேறிய, பசுமை உள்ளங்கொண்ட இளைஞர்கள், ஏராளமாகச் சேர்ந்திருக்கும் வகையில் தோன்றியிருக்கும் கழகமாகும். கண்மூடித்தனமாக எதையும் பின்பற்றாமல் ஆய்ந்து அறிந்து, அடங்கிய கொள்கைச்சான்றோரும், அனுபவத் தன்மை வாய்ந்த முதியவர் பலரும் கழகத்தில் இணைந்து நிற்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தனிப்பட்ட எவருக்காகவும் இணைந்திருக்கவில்லை; கொள்கைக்காகவே—ஜனநாயக முறைக்காகவே இணைந்திருக்கிறார்கள். எல்லோரும் கொள்கை பெரிது என்று கருதுபவர்கள்.

அரசியல்-பொருளாதாரம்-சமுதாயம் பற்றிய கொள்கைகளை மக்களுக்கு அறிவுறுத்தும் பணியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறந்த-உடனடிப்பணியாக இன்று இருந்து வருகிறது. சுயநலத்தின் காரணமாகப் பட்டம்—பதவி பெறுவோர்க்கு இங்கு இடமில்லாமல்போய்விட்டது—பட்டம் பதவி பெறுவது கழகத்தின் உடனடிப் பிரச்சினையும் அல்ல-அதற்கு அவசியமும் தோன்றவில்லை-அவசரமும் கிடையாது-நல்ல ஏற்ற கொள்கைக்கு முழு ஆதரவு தரும் நிலை நாட்டில் ஏற்படவுமில்லை-ஏற்படுவதற்கான அறிகுறி அண்மையில் தோன்றுவதாகவும் தெரியவில்லை. பட்டம்-பதவியை பெறுவதையே நோக்கமாகக் கொண்ட ஒருவருக்கு, எளிதில் அவற்றைப் பெறுவதற்கு ஏற்ற வசதிகளோடு அமைந்திருக்கும் காங்கிரஸ் இருக்கும்போது, அரசியல் மன்றத்தை நாடுவதையே குறிக்கோளாகக் கொள்ளாத முன்னேற்றக் கழகத்தில் எப்படி இடம் இருக்க முடியும் — இங்குதான் வழிகிடையாதே! ஆகையால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பட்டம் பதவியின் மீது ஆசைகொண்டு, நாவசைக்கும் நயவஞ்சகர்களுக்கு இடமில்லை—இடமிருக்க வழியும் செய்யப்படவில்லை. அவ்வளவு தூய்மையதாக உருவாக்கப்பட்டிருக்கிறது கழகம்.

எனவே, கழகத்தின் கிளைகள் ஏற்படாத ஊர்களில், உடனே கிளைகளை ஏற்படுத்தித் தலைமைக் கழகத்தோடு இணைத்துக் கொள்ளவேண்டுகிறோம். எவ்வளவு விரைவில் கிளைகள் அமைத்து விட முடியுமோ அவ்வளவு விரைவில் அமைத்துவிடக் கேட்டுக் கொள்கிறோம்.

கழகத்தில் பணியாற்ற மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையாரிலிருந்து பள்ளி மாணவர்கள் வரையில் பலரும் இசைந்து, விரும்பி முன்வருவது காணப் பெருமகிழ்வடைகிறோம். கழகத்தோழர்களிடையே வற்றா ஊற்றென உணர்ச்சி பெருகி வருவது காணவும் களிபெரு உவகை அடைகிறோம்.

ஆகவே, ஆங்காங்கு கிளைக் கழக அமைப்புகளைக் காணுங்கள்; கிளர்ந்தெழும் கொள்கை உணர்ச்சிப் பெருக்கைக் காட்டுங்கள்!

கல்வி பெறும் உரிமை கடிவது நேர்மையா?

சர் சி. பி. இராமசாமி ஐயர் சென்னை மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரியில் மாணவர் உறைவதற்கெனக் கட்டப்பட்ட புதிய விடுதிகளைத் திறந்து வைத்துப் பேசுகையில், கல்வி பெறும் உரிமை கடிவது பெருந்தவறான செயல் என்றும், எந்த ஒரு குறிப்பிட்ட இனத்தவரும் இவ்வுரிமையினின்று விரட்டப்படக் கூடாதென்றும், உயர் கல்லூரிகளில் எல்லா மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும், சேர்க்க மறுப்பது நாட்டின் முன்னேற்றத்தையும் அறிவுப் பெருக்கத்தையும் தடை செய்வதாகுமென்றும் கூறியுள்ளார். வரவேற்கத்தக்க வார்த்தைகள்; நல்ல அறிவுரை. ஆனால், நடை முறையில் அவர் பேசிச்சென்ற அதே கல்லூரி நிர்வாகிகள் எப்படி நடந்து கொண்டிருக்கின்றனர்.

நம் நாட்டிலே கல்வி இல்லை. 100-க்கு 5 பேர் கூட உயர்தரக் கல்வி பெற்றவர்கள் இருக்க முடியாது. அந்த ஐவரும் கூடக் குறிப்பிட்ட ஓர் இனத்தவராகவே இருப்பர் என்பதில் ஐயமில்லை. அதிலும் சர். சி. பி. பேசப்போன கல்லூரி, ஒரே இனத்தவரின் உயர்வையே உள்ளக்கிடக்கையாகக் கொண்டு உழைத்து வருகிறதென்பது வெளிப்படையாகத் தெரியும் விஷயம். இதைக் கண்டனம் செய்யவில்லை சர் சி. பி.

ஆனால், சர். சி. பி. ரஷ்யா முன்னேற்றம் அடைந்த முறையினை எடுத்துக்காட்டுகிறார் நம் நாட்டவருக்கு.

1917-ல் சோவியத் ரஷ்யாவில் 13 பல்கலைக் கழகங்கள் இருந்தன. இது 1937-ல் 750 பல்கலைக் கழகங்களாக வளர்ந்ததுடனின்றி, 400 தனிப்பட்ட கைத்தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்பட்டன.

விஞ்ஞான நிலையங்கள் 1100 ஆகப்பெருகின. இதன் பயனாக அறிவிலும் ஆற்றலிலும் வளர்ந்தது ரஷ்யா அந்நாடு ஒவ்வொரு துறையிலும் விஞ்ஞானக் கலையறிவைப்புகுத்தி முன்னேற்றப் பாதை நோக்கி விரைந்தது-விரைகிறது ரஷ்யாவின் இரகசியக் கருவி - விஞ்ஞானமே. ரஷ்யாவில் 83 சதவிகித மக்கள் கல்வியறிவுடையவர்களாகி, அறிவைப் பரப்பும் தொண்டர்களாகி அந்நாட்டை அறிவுமயமாக்கி விட்டனர்.

ஆனால் நம் நாட்டிலோ பெருவாரியான மக்கள் படிக்கவே வசதியில்லை. கல்வி பெறுவது பணம் படைத்தோர் உரிமையாக இருக்கிறது. பணமுடையோர், செல்வாக்குடையோர் என்பாரே உயர் கல்வி பெற முடிகிறது. ஏழைமக்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வதே இயலா நிலையிலிருக்கிறது. இதைப் போக்க சர்.சி.பி. வழி கூறினாரில்லை. கல்வி பெறும் உரிமை கடிதல் கூடாதென்று கூற வந்த சர் சி. பி. இந்நாட்டில் கல்வியை பெற முடியாதிருக்கும் மக்களை முன்னணிக்குக் கொண்டு வர, உயர்கல்வி பெறுதற்குள்ள மக்களை அக்கல்வி பெறச் செய்ய வழிகளைக் கூறியிருத்தல் வேண்டும். இவ்வளவுமான பிறகு எந்த இனமேனும் கல்வி பெறத் தடைவிதிக்கப்பட்டால், அதுபெருங் குற்றம் என்று கூறுவது குற்றமாகாது. ஆனால் நாட்டில் பெருவாரியான மக்கள் கல்வியே பெறவசதியற்றுப் போயிருக்கையில், கல்வியில் பிற்போக்குள்ள இனங்களிலுள்ள மக்களுட்சிலர் பணச்செலவையும் சமாளித்துக் கொண்டு உயர்கல்வி பெற முனைந்து வருகையில், அவர்களுக்கெல்லாம் முதலில் இடம் கொடுத்து விட்ட பிறகே, கல்வியில் முற்போக்கடைந்துள்ள சமுதாயத்தினருடைய மக்கள் கவனிக்கப்பட வேண்டும்.

ரஷ்ய நாட்டின் கல்விச்சிறப்பையும் அதனால் அது முன்னேற்றமுற்றிருப்பதையும் மேற்கோள் காட்ட விரும்பும் சர். சி. பி. அதே போன்று நம் நாட்டில் மதச்சார்பற்று, மக்களனைவரும் சமானமே என்னும் நிலை வாழ்க்கையில் நடைமுறையில் ஏற்பட்டு விட்டால் நம் நாட்டிலும் ஒரே சீராக எல்லோரும் கல்வி பெறலாம். இந்த கலாசாரத்தைப்பரப்ப வேண்டுமென விரும்பும் சர் சி. பி. இதை உணர்வாரா? இந்து கலாசாரம் பரவினால் மக்களனைவரும் சமானமாகக் கல்வி பெற முடியுமா? வழியுண்டா அதற்குச் சாத்திரங்களில்!

மது விலக்கு: முழு வெற்றியா?

மதுவரக்கன் வேறு வேடத்தில் உலவுகிறான்

மது விலக்கு, மாகாணம் முழுவதும் பரப்பப்பட்டு, ஓராண்டு முடிந்து விட்டதால் சென்னை முதலமைச்சர், அ. இ. ரேடியோ மூலம் மது விலக்கு வெற்றியைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துப் பேசியுள்ளார். உண்மையிலேயே மதுவிலக்கு முழு வெற்றி தந்தால், அதை அனைவரும் வரவேற்பர். மது ஒழிவதால் அதற்குப் பலியாகிக் கிடந்த பல குடும்பங்கள் நன்னிலையடைந்து குற்றங்கள் பல ஒழிந்து, மக்கள் முன்னேற்றமடைவர் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

மது விலக்கைச் சென்னை அரசாங்கம் மாகாணம் முழுவதிலும் கையாண்டதன் பயனாக, மதுக் கடைகள் ஒழிந்து, வெளிப்படையாக மது உற்பத்தியும் நின்று விட்டதென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமே. ஆனால், பல இடங்களில் கள்ளத்தனமாக மது விற்பனை, மது உற்பத்தி முதலியவை நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. அவற்றையும் அரசாங்கம் இயன்ற வரை கண்டுபிடித்து அடக்கி வருகிறது.

எனினும், மற்றொரு வகையில் வெளிப்படையாக மது வர்த்தகம் நடந்து வருவதை அரசாங்கம் கவனியாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கது. மதுசாரம் மிகுந்துள்ள சில மது வகைகள் வெவ்வேறு மருந்துகளின் பெயரால் வெளிப்படையாக விற்கப்படுகின்றன. மதுவருந்தும் வழக்க முடையோர் இவற்றை வாங்கிக் குடித்துப் பாழாகும் வேலை மீண்டும் துவங்கிவிட்டது. மதுவரக்கன் வேறு வடிவத்தில் மீண்டும் நடமாட முயல்கிறான், அரசாங்கம் இக் கொடிய செயலைக் கவனித்து அடக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். மதுசாரம் மிகுந்துள்ள மருந்தினங்கள் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களுடைய அனுமதியின் மீதன்றி விற்பனை செய்யக் கூடாதென்று தடை செய்யவேண்டும். மருந்துக் கடைகள் மதுக் கடைகள் ஆகிவிட்டிருப்பதை அரசாங்கம் கவனிக்குமா?

மாராட்டிர மாகாணம்?

பம்பாயைத் தலைநகராகக் கொண்டு மாராட்டிர மாகாணம் அமைக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சி வலுவடைந்துகொண்டு இருக்கிறது. அதற்காக, சத்தியாக்கிரகம் உள்பட அமைதியான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று மாராட்டிரத்தின் தலைவரான சேனாபதி பாபத் அறிவித்துள்ளார். குஜிராத்திகளும் மார்வாரிகளும், இதற்கு என்ன பதில் கூறப்போகிறார்களோ தெரியவில்லை. இந்தச் செய்தி கே. எம். முன்ஷிக்குக் கலக்கத்தைத்தான் கொடுக்கும்!

சோவியத் மீது சியாங்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தான்முறை—அரசியல் யூகம்! அவருடைய எடுபிடிகள்—அரசியல் கடை குமஸ்தாக்கள், பல நாடுகளின் தலைநகரங்களிலே, சீனாவின் பிரதிநிதிகள் என்று பேசிக்கொள்ளும் அதிகாரத்தை இழந்துவிட்டார்கள், புது அரசுசீனத்தில் உருவானதும். அந்தப்பழம் பெருமையில் புகழும் பூரிப்பும் இருந்த போதிலும், மற்றவர்களின் வரிசையும் விருதும் கிடைக்கக்கூடியதாக இருந்த போதிலும், அப் பதவிகளில் அமர்ந்திருக்க, அடிப்படையாகத் தேவைப்படும் சீன மக்கள் ஆதரவு, சியாங் கும்பலுக்குக் கிடையாது! எனவே, அந்தப் பிரதி நிதிகளுக்குக் கடுகளாவாவது மனிதப பண்பாடுமான உணர்ச்சி இருக்குமானால், அந்த இடங்களைக் காலி செய்துவிட்டு, உலகத்தில் எங்காவது குடியேறி. உயிர் தப்பிப்பிழைத்துக் கொள்வதுதான் முறை-நீதி. சீனாவின் சார்பில் பேசுவதற்கு, அந்த அதிகாரம் இழந்துவிட்டவர்களுக்கு—இனியும் வாய்ப்பளித்துக்கொண்டு இருப்பது, அமெரிக்கா போன்ற வல்லரசுக்கும் அறமாகாது.

ஐக்கியநாடு சபையில்,சள சள என்று சலசலப்புச் செய்துகொண்டு இருக்கிறார், சீனாவின் பிரதிநிதி-இல்லை-சியாங் சர்வாதிகாரியின் பிரதிநிதி! சோவியத் மீது, 1945-ல்சியாங் கும்பலோடு சோவியத் செய்துகொண்ட நட்பு ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகக்குற்றஞ்சாட்டுகிறார் அதனையும் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார் வகைகெட்டு! இதற்குஆதரவு, அமெரிக்காவும், அதன்ஆணைக்குக் காத்திருக்கும் நாடுகளும், காட்டுகின்றன! நல்லது அல்லஇது ஏற்கனவேஇருக்கும், சோவியத் மனக்கொதிப்பைக் கிண்டிக் கிளறினதாகவே படும், இந்த விதண்டாவாதம்!

சியாங்கிற்கு இனி உதவி செய்து நடைபெறப்போவது ஒன்றுமில்லை என்ற முடிவிற்கு அமெரிக்காவே வந்துவிட்டது. சியாங் கும்பலைப் பற்பலவிதமாக அர்ச்சித்து விட்டு, இன்று அவர் பிரதிநிதியின் பேச்சுக்கு, ஐக்கிய நாடு சபையில் இடமளிப்பதும், அதற்கு ஆதரவுகாட்டுவதும், அமெரிக்காவின் அரசியல் ஞான சூன்யத்தையும் ஆதிக்க ஆசையையுமே காட்டுகிறது. வெளியேற்றுங்கள் அந்தச் சீன வினாசை—மனித சமூக விரோதியை! கண்கலங்கி நிற்கும் சியாங்கிற்கு; ஆறுதல் கூற, அவர் துணைதேவைப்படும் இந்த அரிய தருணத்தில், ஐக்யநாடு சபையில் அவரை அமர்த்தி வைத்துக்கொண்டு இருப்பது அழகாகாது! தன்முன்னாள் நண்பருக்கு, உண்மையில், இன்னும் ஏதாவது உதவிசெய்ய அமெரிக்கா நல்விருப்பம் கொண்டிருக்குமானால், ஐக்கியநாடு சபையில் அங்கலாய்த்துக்கொண்டிருக்கும் சியாங்கின் பிரதிநிதியை. கடைசிமுறையாக, ஆடம்பரமான முறையில், பிரிவுபசாரம் வாசித்துக்கொடுத்து, சீன சர்வாதிகாரத்துக்கு இரங்கற்பா படித்துக்கொடுத்து, தக்கப் பாதுகாப்புடன், அனுப்பிவிடவேண்டும் சீனாவிற்கு! சீன மக்கள் இருக்கிறார்கள் அந்த நல்லவருக்கு நீதி வழங்க!

அமெரிக்காவிற்கு அந்தப் பாரம்வேண்டாம்! சீனமக்களின் பகையை மேலும் பெருமல் தடுத்துக் கொள்ள, அமெரிக்காவிற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். அமெரிக்காவிற்கு எதிராகச் சீன மக்களைக் கிளப்பி எடுத்துக் கொள்ளப்படும் கம்யூனிசப் பிரசாரத்திற்கான, ஆயுதங்களில் ஒன்றைப் பறித்துவிட்டதாகவும் இதனால் ஏற்படும்! அமெரிக்கா, இதனைப் பின்பற்றுமா?

இந்தியாவின் தலைவர் பதவிக்கு இப்போதே போட்டி

இந்தியாவின் தலைவர் பதவிக்காக நடைபெற விருக்கும் தேர்தலில் போட்டி பலமாயிருக்குமெனத் தெரிகிறது. இப்போது கவர்னர்-ஜெனரலாக இருக்கும் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் இந்தியாவின் தலைவர் பதவியை அடைய முடியாதபடி பலவகை முயற்சிகள் நடைபெறுகின்றன வென்றும், பண்டிதர் நேருவே, இராஜகோபாலாச்சாரி தலைவர் பதவிக்கு வர ஆதரவளித்தும, மற்றவர்கள் பழைய சம்பவங்களை மீண்டும் கிளப்பி, அவருக்கு அந்தப் பதவி கிடைக்காதபடி செய்யக் கடும் முயற்சி செய்கின்றனர் என்றும் வேலூரில் கவர்னர்-ஜெனரல் படத்தைத் திறந்து வைத்தபோது அமைச்சர் திரு. பெருமாள் சாமி ரெட்டியார் கூறினர்.

தோழர் பெருமாள்சாமி ரெட்டியார் கூற்றில் தவறு இருக்க முடியாது. கவர்னர்-ஜெனரல் ஒரு முறைக்கிருமுறை செய்த சிபாரிசின் பலனாக மந்திரிப் பதவி அடைந்தவர் இவர். எனவே, இவருக்கு நன்கு தெரியும் தோழர் இராஜகோபாலாச்சாரியாரைப்பற்றி.

ஆக, இந்தியாவின் தலைமைப் பதவிக்குப் போட்டி இப்போதே துவக்கப் பட்டுவிட்டதென்பதும், தலைமைப் பதவிக்குக் கவர்னர்-ஜனரல் கடும் முயற்சிசெய்து கொண்டிருக்கிறார் என்பதும், அவருக்குத் தலைமைப் பதவி கிடைக்கவொட்டாமல் செய்ய முயற்சிகள் பலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனவென்பதும் சென்னை மந்திரியார்மூலம் வெளிப்படுகிறது. இது பதவி வேண்டாப் பெரியார்கள் மண்டலத்தில் நடைபெறும் விவகாரம். சென்னை மந்திரிசபையில் ஒருவரை மந்திரியாக நியமிக்குமாறு கவர்னர்- ஜெனரல் சிபாரிசு. கவர்னர் ஜெனரலுக்கு நாட்டின் தலைமைப் பதவி கிடைப்பதற்காக இந்த மந்திரிகள் பிரசாரம். எப்படி பரஸ்பர சேவை!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

பொள்ளாச்சி—கிளை

பொள்ளாச்சி, செப். 29—இன்று காலை 10 மணிக்குத் தோழர் தமிழ்மணி அவர்கள் தலைமையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு, ஓர் செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்கள்:—தோழர்கள் மு. இளஞ்சேரன், ந. இளமாறன். விளம்பர உறுப்பினர் — தோழர் உ. க. தமிழ்மணி.

ஏனைய செயற் குழுவினர்:—பி. டி. திருமலைசாமி, ச. சம்பந்தம், என். நாகப்பன், தாமஸ், வி. ஆர். மருதன், சோமசுந்திரம். எனத் தோழர் தமிழ்மணி (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

கழகத் தோழர்களுக்கு அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாச் சொற்பொழிவு ஆற்றவும், பொதுக்கூட்டங்களிற் கலந்து கொள்ளவும் வேண்டி, ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள், சொற்பொழிவாளர்களை அனுப்பிவைக்குமாறு நமக்கு ஏராளமான முடங்கல்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் விரும்பும் குறிப்பிட்ட சொற்பொழிவாளர்களுக்குச் செய்திகளைத் தெரிவித்து, அவர்கள் இசைவினைத் தெரிந்து, மீண்டும் கழகத்தோழர்களுக்குச் செய்தியை அறிவிக்க நீண்டகாலம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே கால தாமதம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டி, வெளியூர்களுக்குச் செல்ல இசைந்துள்ள முக்கிய சொற்பொழிவாளர்களின் முகவரிகளைக் கீழே தருகின்றோம். கூட்டங்களுக்கு அழைக்க விரும்பும் தோழர்கள், நேரே அவரவர்களுக்கு முடங்கல் எழுதி, சொற்பொழிவாளர்களின் வசதிக்கேற்றபடி, நாட்களைக் குறித்துக்கொள்ளும்படி கழகத் தோழர்களை வேண்டிக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
செயலாளன், தி மு. க. பிரசாரகுழு.

—: முகவரிகள் :—

1. என் வி. நடராசன், 18, பெருமாள்முதலி தெரு சென்னை 1
2. கே. ஏ. மதியழகன், 30/79 கார்னர்எஸ்டேட்ஸ் செம்புதாஸ் தெரு; சென்னை-1
3. இரே. இளம்வழுதி, c/o பழனியப்பன் குறிஞ்சிப்பாடி (தெ. ஆ)
4. புலவர் கே. கோவிந்தன். B.O L. செல்வவிநாயகர் கோவில் தெரு, திருவத்திபுரம் (வ. ஆ.)
5. சி. பி. சிற்றரசு, c/o திராவிட முன்னேற்றக் கழகம், வேலூர், (வ ஆ.)
6. என். எஸ் இளங்கோ, c/o திராவிட முன்னேற்றக் கழகம், அதிராம்பட்டினம் தஞ்சை (Dt)
7. இ. வி. கே. சம்பத், ஆசிரியர் "புதுவாழ்வு" 39, வன்னியர் தெரு, கிருஷ்ணாபுரம், கோடம்பாக்கம் சென்னை-24.
8. ஏ.வி பி. ஆசைத்தம்பி, ஆசிரியர் "தனியரசு". விருதுநகர்.
9. மா. இளஞ்செழியன், ஆசிரியர் "போர்வாள்", பவழக்காரத் தெரு, சென்னை-1
10. டி. கே. சீனுவாசன், c/o எம். எம். நடராசன் கிழவாசல் தெரு, தஞ்சை.
11. மு. கருணாநிதி, 20, ஹபீப்சாகிப் தெரு, கோட்டை, சேலம்.
12. காஞ்சி கல்யாணசுந்தரம், "மாலைமணி" மண்ணடி சென்னை-1.
13. ஏ. சித்தையன், வாசகசாலைத் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
14. எஸ்.ஆர். சுப்பரமணியன், டவுன் எக்ஸ்டென்ஷன், திருப்பூர்.
15. முருகு. சுப்பிரமணியம், ஆசிரியர் "பொன்னி", புதுக்கோட்டை.
16. ஆர். எஸ். தங்கப்பழம், ஆசிரியர் "கிளர்ச்சி", தூத்துக்குடி.
17. த. மா. திருநாவுக்கரசு, தெற்கிருப்பு, அண்ணாமலைநகர்.
18. எஸ். நெடுமாறன், 39, வடக்கு வீதி, மலைக்கோட்டை; திருச்சி.
19. எஸ். அப்பாவு, ரயில்வேகாலனி, ஈரோடு.
20. எஸ். கே. சாமி, ரயிலடித் தெரு; குடந்தை.
21. சி. டி. டி அரசு, 11, பொம்மிசெட்டித் தெரு, P. T. சென்னை.
22. எஸ். எஸ். மணி, c/o திராவிடமுன்னேற்றக் கழகம், தஞ்சை.
23. இரெ. இளவரி, c/o தங்கப்பன். சென்டிரல்பஜார், பட்டுக்கோட்டை.
24. எம். எஸ். ராமசாமி, புளியம்பட்டி, அருப்புக்கோட்டை.
25. சத்தியவாணிமுத்து, 8. போர்ச்சுகீசியர் தெரு, சென்னை-1.
26. ஜி.என். ராஜு, கோபிச்செட்டிப்பாளையம், (via) ஈரோடு, (கோவை ஜில்லா).
27. எம். எஸ். சிவசாமி. c/o "கிளர்ச்சி" தூத்துக்குடி.
28. இராமாமிர்தத்தம்மையார், கொரநாடு, மாயவரம்.
29. பூ. கணேசன, "நிலவு" அச்சகம், வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை.
30. கி. மனோகரன, சண்முகவிலாஸ், கோட்டாறு, (நாகர்கோவில்)
31. என். ஜீவரத்தினம், கார்ப்பரேஷன் கவுன்சிலர், பார்பர்ஸ் பிரிட்ஜ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை
32. இரா. நெடுஞ்செழியன், "மாலைமணி" மண்ணடி, சென்னை-1.
33. காஞ்சி. மணிமொழியார், ஆசிரியர் 'போர்வாள்' பவழக்காரத் தெரு, சென்னை-1.
34. கே. கோவிந்தசாமி, 5, காளப்ப ஆசசாரி தெரு, பார்க்டவுன, சென்னை.
35. மா. இராசமாணிக்கம், "லட்சுமி பிரஸ்" திருவத்திபுரம். (வ ஆ)
36. ப. கண்ணன், தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம், (சேலம் ஜில்லா)
37. எஸ். சிவப்பிரகாசம், 28, அம்பலத்தாடு ஐயர் மடம்தெரு, பாண்டிச்சேரி.
38. கே. வி. கே. சாமி, C/o திராவிட முன்னேற்றக் கழகம், தூத்துக்குடி.
39. இராம அரங்கண்ணல். "திராவிட நாடு" காஞ்சிபுரம்.
40. க. அன்பழகன், 10, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை.
41. ஏ. கே. வேலன், செந்தமிழ்ப் பாசறை, கரந்தை, தஞ்சை.

தமிழ்நாட்டு நெசவாளர்களின் தரித்திர நிலை

—(0)—

மரணத்தின் பிடியில் சிக்கித்தவிக்கும் பாட்டாளிகள்

ஆளவந்தார்களுக்குச் சட்டசபை உறுப்பினர் அறிக்கை

பொதுவாக, சேலம் ஜில்லாவிலும் சிறப்பாக, திருச்செங்கோடு தாலுக்காவிலும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் சார்பாக, சென்னை அரசாங்க முதல் அமைச்சருக்கு, திருச்செங்கோடு எம். எல். ஏ. தோழர் டி. எஸ். பட்டாபிராமன் எம். ஏ., பி. எல். பின்வரும் முறையீட்டை அனுப்பி வைத்துள்ளார்:—

இந்த மாவட்டத்திலுள்ள லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்— அவர்களுடைய குடும்பத்தினர் சார்பாக, பின்வரும் விவரங்களைத் தங்களிடமும் அரசாங்கத்திடமும் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். இவற்றைத் தாங்களும் அரசாங்கமும் உடனடியாகக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

கடந்த ஆறுமாத காலமாக நெசவுத் தொழில் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறதென்பதையும். கைத்தறி நெசவாளர்களை அது மிகப் பெரிய அளவில் பாதித்துவிட்டிருக்கிறது என்பதையும் அரசாங்கம் கவனித்தே இருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களின் துயரம் எப்போதுமே மிக மோசமான—பரிதாபத்திற்குரிய நிலையில்தான் இருந்து வந்திருக்கிறது. போர்க்காலத்திலும், போர் முடிந்த பின் இரண்டாண்டுகள் வரையிலும், கைத்தறித் துணிகளுக்குப் பெரும் தேவை ஏற்பட்டிருந்தது. ஆனால் இந்தத் தேவையைச் சமாளிக்கக்கூடிய அளவில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. இப்போது நிலைமை அடியோடு தலைகீழாக மாறிவிட்டது. இதன் பயனாக இப்போது நூல் ஏராளமாகக் கிடைக்கிறதெனினும் நெசவான துணிகளை விற்பதற்கு அடியோடு வழியில்லாமற் போய்விட்டது.

அரசாங்கத்தின் நல்லெண்ண முயற்சியும் இருந்துங்கூட, கைநெசவுத் துணிகள் இந்த நாட்டிலே ஏராளமாகக் குவிந்து தேங்கிக் கிடக்கின்றன என்பது வெளிப்படை. பாகிஸ்தான், மலேயா, இலங்கை முதலிய நாடுகளும், சில கீழ்க்கோடி நாடுகளும் கொண்டிருக்கும் பணநிலைக் கொள்கையே இத்தகைய நிலைமைக்கு முக்கிய காரணமாகும்.

இதன் பலன் என்ன? கடந்த மூன்று மாத காலமாக, பெரும்பாலும் நெசவாளர்கள் அனைவருமே ஒரு வேலையுமில்லாமல தவித்துக் கிடக்கின்றனர். அவர்களுடைய பலர், சில அணாக்களைக்கூடச் சம்பாதிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். சிலர் பட்டுநூல் நெசவு வேலையை மேற்கொண்டனர் என்பது உண்மையேயாயினும், இவ்வாறு பட்டு நெசவு வேலை கிடைக்கப்பெற்றவர் தொகை மிகமிக அற்பமாக இருக்கிறது.

நெசவாளர் வேலைசெய்யத் தயாராயிருந்தும், வேலை கிடைக்காமையால் பல குடும்பங்கள் பட்டினி கிடக்கும் நிலைமைக்கு ஆளாகிவிட்டன. நிலைமையைச் சமாளிக்க, பசிப் பிணியிலிருந்து தப்ப இந்தக் குடும்பங்கள் தங்களுடைய தட்டு முட்டுச் சாமான்கள், நகைகள், மற்றுமுள்ள சில்லறைப் பொருள்கள் முதலியவற்றை யெல்லாம் விற்று வருகின்றனர். ஆயிரக்கணக்கான நெசவாளர்களும் அவர் தம் குடும்பங்களும் பட்டினியால் மாண்டு மடியும் நாள் இன்னும் நெடுந்தொலைவில் இல்லை.

எனவே, நிலைமையைச் சமாளித்து, இத்தகைய பட்டினிச் சாவுகள் நேராமல் காக்க, அரசாங்கம் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களைப் பட்டினிச் சாவினின்று காப்பாற்றி உயிரோடு வைத்திருக்க, குறைந்த அளவு வேலையாவது கொடுத்து உதவ முன் வரவேண்டும். அல்லது அவர்களுள் பலருக்கு வேறு வகை வேலைகளையாவது கொடுத்துதவ முன்வர வேண்டும்.

இது நீண்ட காலவேலைத் திட்டமாக அமையலாம் ஆனால், அரசாங்கம் குறுகிய காலதிட்டம் ஒன்றை வகுத்து உடனடியாக அதனை நடைமுறையில் கொண்டுவர வேண்டுவது இன்றியமையாததாயிருக்கிறது.

1. முக்கியமான இடங்களில் கைத்தறி நெசவாளர்கள் பெரும்பான்மையோராக இருக்குமிடங்களில்-துன்ப நிவாரண வேலைகள் உடனே துவக்கப்பட வேண்டும். நெசவாளர்களுக்கு நூல் கொடுத்து, நெசவு செய்யப்பட்ட துணிகளை வாங்கி விற்பனை செய்ய அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கம் தன்னுடைய துணித் தேவைகள் அனைத்தையும் இந்த வகையாகச் சரிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதாவது கை நெசவுத் துணிகளையே அரசாங்கம் தன் தேவைக்குப்பயன் படுத்த வேண்டும். நெசவாளர்களின் துயரை நீக்குவதற்கெனப் பஞ்ச நிவாரண நிதியை இதற்கெனப் பயன் படுத்தலாம். அல்லது இதற்காகத் தனி நிதி ஒதுக்கித் தரப்படலாம். இப்போதுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அரசாங்கம், இதற்கெனப் பயன படுத்திக் கொள்ளலாம்.

2. ஏழை நெசவாளர்களின் குடும்பங்களுக்கு இலவசமாகவேனும். அல்லது அரைவிலைக்கேனும் உணவுப்பொருள் பங்கீட்டை வழங்க வேண்டும். சிறிது காலம் வரை இந்த ஏற்பாடு தொடர்ந்து அனுசரிக்கப்படுதல் வேண்டும்.

3. ஸ்தல ஸ்தாபனங்கள் அனைத்தும் தங்கள் துணித் தேவைகளுக்குக் கதர் அல்லது கைத்தறித் துணிகளையே வாங்கிக்கொள்ள அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

4. நெசவாளர்களின் இந்தப் பிரச்சினையை ஆழ்ந்து கவனித்து நிரந்தரமானமுறையில் அதைத்தீர்த்துவைக்கத்தக்கப் பரிகாரங்களைக் கண்டு பிடித்துக் கூறுவதற்குகென ஒரு குழுவினரை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

கைத்தறி நெசவாளர்களின் துன்பம் மிகமிகப் பரிதாபத்திற்குரியதாக இருப்பதுடன், நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. அரசாங்கத்தார் இதில் சிறு தாமதம் செய்தாலும் அது மிகக் கொடிய நிலைமையை உண்டாக்கிவைத்துவிடக் கூடும். எனவே, மேற்கொண்டு எந்த விதமான தாமதமும் இல்லாமல் உடனடியாக தங்களாலியன்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்றும், இது குறித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

மாலை வேளையில் மகிழ்வின்பம் பெற!

அமெரிக்க நியூயார்க் நகரில், மாலை வேளைகளில், மக்கள் மகிழ்வின்பம் பெறும்பொருட்டு, பக்குவப்படுத்தப்பட்டிருக்கும் 'ஜோன்ஸ் பீச்' தோற்றமே, மேலே காட்டப்பட்டிருப்பதாகும் குளிப்பதற்கான நீர்க்குட்டைகள், புற்றரை வெளிகள், 20000 கார் நிறுத்தி வைப்பதற்கான இடங்கள், எல்லாம் இதன்கண் அமைந்திருக்கின்றன

கோவைத்தோழர்கட்கு வேண்டுகோள்

வரும் 16-10-46 அன்று திராவிட முன்னேற்றக் கழக, கோவைக் கிளையின் ஆரம்ப விழாவை கார்பொரேஷன் பார்க்கில் சிறப்புற நடத்த வேண்டியிருப்பதால், நகரிலும் சுற்றுப்புறக்கிராமங்களிலும் உள்ள கழகத் தோழர்கள் மேற்கூட்டச் செலவுக்காகத் தங்களாலியன்ற அளவு பொருளுதவி தாராளமாகச் செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுவதாகவும். பொருளுதவி செய்ய விரும்பும் தோழர்களும் முக்கிய உறுதி கூறியத் தோழர்களும், அந்தந்த வட்டாரப் பிரதிநிதிகளிடமாவது, அல்லது 9-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் கூட இருக்கும் செயற்குழுக் கூட்டத்திலாவது கொடுக்கும்படியும், தோழர் வெ கிருட்டினமூர்த்தி வேண்டுகிறார்.

மதுரை மாவட்டத் தோழர்களுக்கு

மதுரை, செப். 29—

மதுரை மாவட்ட திராவிட இயக்கத் தோழர்களுக்கு அமைப்புக் குழு உறுப்பினரான தோழர் எஸ். முத்து கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுக்கிறார்:—

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கும் மதுரை மாவட்ட திராவிட இயக்கத் தோழர்கள் மத்திய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிக்கைக் கிணங்க. ஆங்காங்கு அங்கத்தினர்களைச் சேர்க்கும் தோழர்களிடம் தங்களின் பெயரைப் பதிவு செய்து கொண்டு ஆக்க வேலையில் தீவிரமாக ஈடுபட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்வதோடு ஆங்காங்குள்ள கழக முக்கியத் தோழர்கள் கூடுமானவரை அக்டோபர் 15ம் நாளுக்குள்ளேயே அங்கத்தினர்களைச் சேர்த்துக் கழகங்களை அமைத்து அக்டோபர் 16ம் நாளன்று துவக்க விழா கொண்டாடும்படி கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் சேர்க்கும் புத்தகங்கள் தேவைப்படுவோர் முன்கூட்டி அறிவித்தால் புத்தகங்கள் கிடைத்தவுடன் அனுப்பி வைக்கப்படும் தோழர் எஸ். முத்து அவர்களின் முகவரி:—திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் குழு உறுப்பினர், 324, அழகரடி, மதுரை.

வருந்துகிறோம்

ஈரோடு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மகளாரும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் தமக்கையாருமான தோழியர் மிரண்டா கஜேந்திரன் அவர்களின் மூத்த பெண் குழந்தை கலாவதி, நிமோனியா காய்ச்சலால் நோய் வாய்ப்பட்டு. 28—9—49 காலை இயற்கை எய்திய செய்தி கேட்டு, மிக வருந்துகிறோம். குழந்தையை இழந்து வருந்தும் தோழர்கள் மிரண்டா-கஜேந்திரன் ஆகியோர்க்கும், அவர்கள் குடும்பத்தினர்க்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ—ர்)

அறிவிப்பு

ரெடிமேட் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அழிக்கும் மருந்தை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

இனி நடப்பவை

கோவில்பட்டி:— இவ்வூர் திராவிடர் கழகத்தின் அங்கத்தினர்கள் கூட்டமொன்று 5-10-49 புதன் இரவு 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அவ்வமயம் கழக எதிர்கால ஆக்க வேலைகள் பற்றி ஆலோசித்து முடிவு செய்யப்படும். அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு தோழர். செ. அருணாசலம் (செயலாளர்) வேண்டுகிறார்.

* * *

கோவில்பட்டி — இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் திராவிடர் கழகக் கட்டிடத்தில் 5—10—49 இரவு 8 மணிக்கு நடைபெறும். தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பியும் கலந்து கொள்வார். அன்பர்களனைவரையும் கலந்து கொள்ளுமாறு தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அழைக்கிறார்.

* * *

மார்த்தாண்டன்பட்டி— இவ்வூர் "பகுத்தறிவு" திராவிடர் கழகத்தில் 9-10-49 மாலை 4 மணிக்கு தோழர் த. காசிவிசுவநாதம் அவர்கள் ஆதரவில் ஓர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பதுபற்றியும், கொடியேற்றுவதுபற்றியும், நெல்லை மாவட்டத்தில் கிளைக் கழகங்கள் அமைப்பதுபற்றியும் ஆவன செய்ய ஆலோசிக்கப்படும். அன்றைய தினம் வெளியூர்த் தோழர்களான தூத்துக்குடி கே. வி. கே. சாமி, ஆற்றங்கரை கு. பரமசிவம், கோவில்பட்டி எ. எஸ். பீர்மைதீன் நாகலாபுரம் முத்துசாமி, குளத்தூர் நடராசன் ஆகியோரும் கலந்து கொள்வர். கழக உறுப்பினர்களும், அனுதாபிகளும் தவறாது வருகை தர தோழர் த. சின்னப்பழம் வேண்டுகிறார்.

* * *

திருச்சி—திருச்சி திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 9-10-49ல் கருணாநிதி பார்க்கில் (சங்கரன் சத்திரத்தில்) நடைபெறும். முன்னேற்றக் கழக சார்புடைய மாணவர்கள் தவறாது வருமாறு தோழர் எ. டி. அருணாசலம் (கன்வீனர்) அழைக்கிறார்.

Printed & Published by E. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1